DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 289/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 09th day of January 2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 9** | கிராமம் | : | அரியனேந்தல் |
| பெயர் | : | ராஜ்குமார் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | பாண்டி | சமயம் | : | இந்து |
| வயது | : | 44 | ஜாதி | : | தேவேந்திரகுலவேளாளர் |
| தொழில் | : | மின்சாரத்துறையில் வேலை | | | |

<u>நாள்: 09.01.2025</u>
<u>நேரம்: 01.05</u>

1 , 3, 4 எதிரிகள் ஆஜர்.2ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் BNSS பிரிவு 355 ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதன்மை விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து மின்சாரத்துறையில் வேலை செய்து வருகிறேன். 25.10.2022 அன்று காலை 10.45 மணியளவில் எங்கள் ஊரில் நான் நின்று கொண்டிருந்தபோது தேவிபட்டிணம் போலிசார் என்னிடம் வந்து எனது தங்கை கணவரை அடித்தது குறித்து விசாரணை செய்ததாக சொல்லி என்னிடம் ஒரு எழுதியதாளில் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.8 ஆகும்**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 எனது மைத்துனர் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால்

சரிதான். நான் அரசு ஊழியராக பணி செய்து வருகிறேன் என்றால் இல்லை, தற்காலிக பணியில் பணிபுரிந்து வருகிறேன். பொதுவாக எனக்கு பணி நேரம் காலை 9.00 – மாலை 5.00 வரை என்றால் சரிதான். நான் பணிக்கு சென்றால் வருகைப்பதிவேட்டில் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் அன்று நான் விடுப்பு எடுத்திருந்தேனா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்தததாக சொல்லப்படும் அன்று நான் ஊரில் இல்லை என்றாலும், பணியில் இருந்தேன் என்றாலும், அ.சா.1 எனது மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2025.01.09 16:15:06 +0530